திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இந்த சிவகெங்கைப் பகுதியிலே தோண்டி எடுக்கக்கூடிய நிலங்களை, ஆர்ஜிதம் செய்யும் வேலைகள் நடந்து வருவதாகச் சொன்னார்கள். அந்த ஆர்ஜித வேலையை முடித்தபின் அங்கு ஒரு தொழிற்சாலையைத் துவங்குவதற்கு குறிப்பாக எவ்வளவு காலமாகும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? அந்தத் தொழிலை ஆரம்பிப்பதன் காரணமாக எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிப்பார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதற்கான புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இல்லை. முதல் கேள்வி, எப்போது ஆரம்பிக்கப்படும் என்று கேட்டார்கள். அது வெகு விரைவிலே ஆரம்பிக்கப்படும்.

TAMIL NADU CHEMICAL PRODUCTS LIMITED

*Q. No. 300 — THIRU P. NEDUMARAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether the eleven cases filed against the former Managing Director of Tamil Nadu Chemical Products Limited for alleged offences under Sections 420, 477A, etc., of C.P.C. had been withdrawn by the Government;

(b) if so, the reasons therefor; and

(c) whether the amount involved in the cases which is said to be amounting to Rs. 45 lakhs had been recovered and made good to the Company?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ)—(இ) : தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக இயக்குநர் மீது சென்னை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் குற்றச்சாட்டுகள் வரையப்படவில்லை. மேலும் இந்த வழக்குகளைப் பொறுத்தவரை இருக்கக்கூடிய ஆதாரங்களைக் கருதில் கொண்டு பார்க்கும்பொழுது குற்றம் சாட்டப்பட்டவர் மீது வெற்றிகரமாக குற்ற வழக்குத் தொடர முடியாது என்றும், குற்றம் சாட்டப்பட்டவர் மீது வழக்குத் தொடர்வதால் நேரமும், பொதுப்பணமும் வீணாவதுடன் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தொல்லையைத்தான் தரும் என்றும், இந்த வழக்கைத் திரும்பப் பெறலாம் என்றும் அரசு வழக்குரைஞர்

1981 மார்ச் 2]

கருத்து தெரிவித்தார். இதை தலைமை வழக்குரைஞர் ஏற்றுக் கொண்டார். மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

ஏற்கனவே இதில் 40 இலட்சம் ரூபாய் அளவிற்கு வெளியே போயிருக்கிறது என்ற கேள்வி இருக்கிறது. ஆனால் உண்மை நிலைமை இந்த கம்பெனியிலிருந்து ஒரு பைசா கூட வெளியே போகவில்லை. திரு. அனந்தசாமி என்பவரின் பணம் தான் ஏறக்குறைய ஒன்பது இலட்சம் ரூபாய் அளவிலே இந்தக் கம்பெனியிலே இருக்கிறது என்பதுதான் உண்மையான நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, இந்தத் தமிழ் நாடு கெமிக்கல்ஸ் புராடக்ட்ஸ் என்ற நிறுவனத்தில் 40 இலட்சம் ரூபாய்க்கு மேல் மோசடி நடைபெற்றிருப்பதாக, அதை ஆடிட் செய்த ஆடிட்டர்கள் சொல்லி 'டிட்கோ' எம்.டி. அவர்கள் போலீசிலே புகார் செய்து அதன் பின்னாலே கிரைம் பிரான்ச் சி.ஐ.டி. புலனாய்வு செய்து விட்டு எட்டு குற்றச்சாட்டுகளை திரு. அனந்தசாமி மீது அதுகூறி அதற்குப் பின்னால் பப்ளிக் பிராசிகியூட்டர், அட்வகேட்-ஜெனரல் முதலியோர் பரிசீலனை செய்து வழக்கு தாக்கல் செய்யலாமென்று அவர்கள் சிபார்சு செய்து நீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்து, பின்னால் நீதிமன்றமே மூன்று குற்றச்சாட்டுக்களை திரு. அனந்தசாமி மீது சுமத்தியது. ஆக மொத்தம் 11 குற்றச்சாட்டுகள் என்றால் 'கிரிமினல் பிரீச் ஆப் டிரஸ்ட்' . . . . . .

[முற்பகல் 9-10].

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு வகையிலே அதைக் கொண்டு வரலாம், கேள்வி நேரத்திலே கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. நெடுமாறன்: 11 குற்றச்சாட்டுக்களை சுமத்தி 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதியிலே கைது செய்யப்பட்டார். அந்த வழக்கு $2\frac{1}{2}$ ஆண்டுக் காலம் நடந்தது. அந்தக் காலத்திலே அந்த வழக்கிலே ஆதாரம் இல்லை என்ற சிந்தனையே இல்லை. $2\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் தேதி திடீரென்று வழக்கு வாபஸ் வாங்கப்படுகிறது. ஆடிட்டர்—ஜெனரல் அதை ஆட்சேபித்து இருக்கிறார். கம்பெனிக்குத் தெரியாமல் வாபஸ் வாங்கியது தவறு என்று ஆட்சேபித்து இருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் ஏற்கனவே சொன்னேன். பப்ளிக் பிராசிக்யூட்டர், அட்வகேட்— ஜெனரல் அத்தனை பேர்களும் அந்த வழக்கை நடத்துவதினாலே அரசி

னுடைய பணம் விரையமும், கால விரையமும் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் நிலைமையே தவிர அந்த வழக்குகள் திரும்பப் பெற வேண்டும் என்பதில் யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற காரணம் ஏற்கத் தக்கதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் அனுமதிக்கப்பட மாட்டாது.

திரு. ப. நெடுமாறன் : அரசியல் ரீதியாக அந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இதில் எந்தவிதமான அரசியல் தலையீடும் இல்லை, அல்லது அரசியல் காரணங் களுக்காக அந்த வழக்குகள் திரும்பப் பெறப்படவும் இல்லை. ஏற்கனவே வழக்குத் தொடரப்பட்டது. அரசினுடைய பணம் கம்பெனியை விட்டு வெளியே போய் இருப்பதற்கு முகாந்திரம் இருக்கிறதா என்பது கேள்வி. அரசினுடைய பணம் ஒரு பைசா கூட வெளியே போகவில்லை, அந்தக் கம்பெனியிலே தான் இருக் கிறது. யார் குற்றம் சுமத்தப்பட்டாரோ அந்த அனந்தசாமி யினுடைய பணம் 9 இலட்ச ரூபாய் அந்தக் கம்பெனியிலே இருக்கிறது. சிவில் கேஸ் போடப்பட்டு அது நீதிமன்றத்திலே பெண்டிங் ஆக இருக்கிறது. அதுதான் நிலைமையே தவிர யாரும் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற அடிப்படையிலோ அல்லது அரசியல் அடிப்படையிலோ அல்லது அரசியல் ரீதியிலோ வழக்கு வாபஸ் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : டிட்கோ நிறுவனத்தின் மூல மாக அந்த நிர்வாக அதிகாரி அவர்கள் கொடுத்த தகவல் மூலமாக போலீசார் விசாரணை செய்து 40 இலட்சம் ரூபாய் மோசடி நடந்திருக்கிறது என்று கருதப்பட்டு கேஸ் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அரசு வழக்குரைஞரும் மற்றவர்களும் தவறு நடந்திருக்கிறது என்று கருதி சார்ஜ் ஷீட் போட்டு கேஸ் தாக்கல் செய்து இருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் பண விரையம் ஆகும் என்று சொல்கிறார்கள். பண விரையம் ஆகும் என்ற காரணத்தால், குற்றம் இல்லாத நிலையில் வழக்கு பதிவு செய்த அரசு வழக்குரைஞர் மீதும் மற்றவர்கள் மீதும், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர். ஒரு வழக்கு தொடரப்படுகிறது என்ற காரணத்தாலே அதிலே முகாந்திரம் இருக்கிறது என்று சொல்ல முடியாது, தொடரப்பட்ட அத்தனை வழக்குகளிலேயும் முகாந்திரம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. எப்.ஐ.ஆரிலே பதிவு செய்யப்படுகிறது, வழக்குப் போடப்படுகிறது. அந்த வழக்கிலே முகாந்திரம் இல்லை என்றும், அதை வெற்றிகரமாக நடத்த முடியாது என்றும் பப்ளிக் பிராசிகியூட்டரும், அட்வகேட்-ஜெனரலும் முடிவு செய்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் வழக்குகள் வாபஸ் வாங்கப்படுகின்றன. எப்.ஐ.ஆர். பதிவு செய்து வழக்கு போடப்பட்டு வாபஸ் வாங்கப்படுவது அனந்தசாமி மீது போடப்பட்ட வழக்கிலே மட்டும் நடப்பதில்லை. சரியான முகாந்திரம் இல்லாவிட்டால் வழக்குகள் இந்தியா முழுவதிலும் வாபஸ் வாங்கப்படுகின்றன, ஆகவே இதிலே புதுமை ஒன்றும் இல்லை, எந்தவிதமான தவறும் நடக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : இந்த கேஸ் வாபஸ் சம்பந்தமாக இவ்வளவு பெரிய பயங்கரமான ஊழல் கேஸ் வாபஸ் வாங்கப்பட்டது பிஷியாக இருக்கிறது என்ற எண்ணம் மக்களிடத்திலே இருக்கிறது. பணம் திருப்பிவிடப்பட்டிருக்கிறது. இது பப்ளிக் ப்ராசிகியூட்டருடைய அட்வைஸ் என்று சொல்லப்படுகிறது. அதாவது அது ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது வாபஸ் வாங்கப்படுவதற்கு. டைவர்ஷன் என்று சொல்லப்படுகிறது. அந்த டைவர்ஷனே சட்ட விரோதமானதாகும்; உண்மைக்கு மாறாக கிரெடிட் டெபிட் மூலமாகச் செய்ததாகவும், ஸ்பெஷல் ஆடிட் கூறுகிறதே அதுமாதிரி மின்சார வாரிய சீப் என்ஜினியர் பேரிலும், சிட்கோ மேனேஜிங் டைரக்டர் பேரிலும் உண்மைக்கு மாறான கடிதம் எழுதப்பட்டதாகவும் கூறப்படுகிறதே. மிஸ்டர் அனந்தசாமி ஆடிட்டிலே ஏமாற்றி பேலன்ஸ் ஷீட்டிலே கையெழுத்து வாங்கப்பட்டது என்று சொல்கிறபொழுது இவ்வளவு சீரியஸான விஷயங்கள் அடங்கியிருக்கின்றபொழுது சர்க்கார் பேரிலே இருக்கக்கூடிய சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு இது சம்பந்தப்பட்ட சகல டேப்பர்களும் சீப் ஜஸ்டிஸ் ஆப் தி ஹைகோர்ட்—மெட்ராஸ் ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ் கையிலே ஒப்படைத்து அல்லது இதற்கு ஜுடிஷியல் என்கொயரி வைத்து பிரைமாபேசி இருக்கிறதா என்று பார்க்க ஏற்பாடு செய்வார்களா? இதை வித்ட்ரா செய்தது நியாயமா என்று அறிய சீப் ஜஸ்டிஸிடம் எல்லாப் பேப்பர்களையும் சப்மிட் செய்வதற்குத் தயார்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன், திரு. அனந்தசாமி அவர்கள் தனக்கும், தன்னுடைய குடும்பத்தின் பெயராலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற பங்குகள் இருக்கிறதே அது தவறான வகையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கம்பெனி

பெட்டிஷன் ஒன்றை ஹைகோர்ட்டிலே அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த சிவில் கேஸ் அங்கே வழக்குமன்றத்திலே இருக்கிறது. அதற்குமேலே போய் வாதாடுவது என்பது சப் ஜுடீஸ் ஆக வரும். ஆகவே, இப்பொழுது சிவில் கேஸ் ஹைகோர்ட்டில் இருக்கிறது. கிரிமினல் வழக்கைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னேன்; அதிலே முக்கியமான அம்சம், அரசாங்கத்தினுடைய பணம் விரயப்படுத்தப்பட்டிருக்கிறதா அல்லது கம்பெனிக்கு வெளியே போயிருக்கிறதா அல்லது அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல திரு. அனந்தசாமி அந்தப் பணத்தை எடுத்துத் தவறான முறையிலே பயன்படுத்தியிருக்கிறாரா, கையாடல் செய்திருக்கிறாரா, இதுதான் சம்பந்தப்பட்ட பிரச்னை. அப்படி எதுவும் நடக்கவில்லை. அதற்கு எந்த ஆதாரமும் இல்லை, அந்த அடிப்படையிலேதான் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சீப் ஜஸ்டிஸிடம் விடத் தயாரா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கனவே அது ஹைகோர்ட்டிலே ஜட்ஜிடம்தான் இருக்கிறது; சிவில் கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு ஒரு நீதி விசாரணையோ அல்லது சீப் ஜஸ்டிஸிடம் விடக் கூடிய அளவிற்கு இதிலே எந்தவிதமான தவறோ நடக்கவில்லை; அதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒரு மகாமோசடி, வால்காட்தனத்தையும் மிஞ்சுகின்ற மோசடி........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு தீர்ப்பே வராததற்குள், அது மோசடியா இல்லையா என்று உறுப்பினரே தீர்ப்பளித்து விட்டார் என்றால் இங்கே மாமன்றத்தை நடத்தமுடியாது. கேள்வி ஏதாவது இருந்தால்கேட்கலாமே தவிர வழக்குக்குள்ளே போகக் கூடாது.

திரு. க. பாரமலை : தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது அரசாங்கப் பணம் கையாடல் செய்யப்படவில்லை என்ற காரணத்தால்தான் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தனிப்பட்ட நபர், அவர் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையைச் செலுத்திவிட்டதாக உண்மைக்கு மாறான தகவல் கொடுத்து அதன்பேரில் அது உண்மையாகச் செலுத்தப்பட்டிகிருக்றதா என்பதைப்பற்றி

1981 மார்ச் 2]

சற்றுகூடச் சிந்தித்துப் பார்க்காமல் அல்லது அதைத் தெரிந்து கொள்ளாமல் அவர்கள் கோரிய பணத்தையும் அரசாங்கம் கொடுத்து, இதிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது—

The Special Audit of the Accounts of the company conducted by the Internal Auditors disclosed an illegal diversion of Rs .40·75 lakhs.

திரு. என் எஸ். வி. சித்தன் : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இது என்ன அரைமணி நேர விவாதமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆடிட்டிலே குற்றம் சொல்லியிருக்கிறார்கள் என்பதை ஏற்கனவே அவருடைய தலைவர் சொல்லியிருக்கிறார். அது சம்பந்தமாகக் கேள்விகள் இருந்தால் கேட்கலாம். படிக்க ஆரம்பித்து விட வேண்டாம்.

திரு. க. பாரமலை: Rs. 40 lakhs purported to have been received—40 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாகக் கணக்கிலே மட்டும் எழுதி, அதைத் திருப்பிச் செலுத்திவிட்டதாகக் கணக்கு மட்டும் எழுதி அதன் பேரால் அதை அடிப்படையாக வைத்து ஏறக்குறைய 600-க்கும் அதிகமான இலட்சம் பணம், அரசாங்கப் பணத்தை ஒரு தொழிலிலே முதலீடு செய்வதற்கு எப்படி இந்த அரசாங்கம் முன் வந்தது ? அதற்கு எந்த அதிகாரி பொறுப்பு என்பதை விசாரிப்பதற்கு ஒரு நீதி விசாரணையை இந்த அரசாங்கம் அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், இது மிகச் சாதாரணமான விஷயம் என்று. இதிலே நீதி விசாரணை நடத்துவதற்கோ அல்லது வேறு எந்தவிதமான விசாரணை நடத்துவதற்கோ எந்தவிதமான அவசியமும் இல்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன். அரசியல் காரணங்களுக்காக வழக்குகள் திரும்பப் பெறப்பட்டதா என்று கேட்டார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் அடிக்கடி இதையே கேட்டு, இதிலே 1/2 மணி நேரம் எடுத்துக்கொள்வதைப் பார்த்தால்தான் கேள்விகள் அரசியல் காரணங்களுக்காகக் கேட்கப்படுகிறதோ என்ற சந்தேகம் வருகிறது. வழக்குகளை நடத்த வேண்டியவர் பப்ளிக் ப்ராசிக்யூட்டர், மற்றும் அட்வகேட்-ஜெனரல். அவர்களுடைய ஒப்பினியன் பேரிலே வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மேலே சிவில் கேஸ் நடந்து கொண்டிருக்கிறது. வழக்குகளுக்குள்ளே போனால், அதாவது டீடெய்ல்ஸுக்குள்ளே போனால், The matter is sub judice, since it is with the High Court.